2016 ஆகஸ்ட் 23]

99—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***219—திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வடக்கு மற்றும் தெற்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை வடக்கு மற்றும் தெற்கு வட்டாட்சியர் அலுவலகங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளன. இரண்டு கட்டடங்களும் தற்போது நல்ல நிலைமையில் உள்ளன. மேலும், மதுரை மாவட்டத்தில் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மதுரை வடக்கு மற்றும் தெற்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் அதிசயங்களையும், அற்புதங்களையும் 'அம்மா திட்டம்'மூலம் செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுரை மாவட்டம், மதுரை வடக்கு மற்றும் தெற்கு வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகுந்த பழமைவாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறியாதது அல்ல. அவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள்ளே அமைந்திருக்கின்றன. மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள்ளே, கோட்டாட்சியர் அலுவலகம், உணவு மற்றும் நுகர்பொருள் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மற்றும் பல்வேறு அலுவலகங்கள்*

அமைந்திருக்கின்றன. தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அலுவலகம், மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், மதுரை கிழக்கு வட்டாட்சியர் அலுவலகம், இம்மூன்றும் வானளாவிய கட்டடங்களாக இன்றைக்கு உருவாகிக் கொண்டிருப்பதிலே நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அந்த அடிப்படையிலே, மதுரை வடக்கு வட்டமும் மற்றும் மதுரை தெற்கு வட்டமும் பழமைவாய்ந்த வட்டங்களாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி, இன்றைக்கு அவை சீர்படுத்தப்படுவதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வட்டங்கள், அந்தந்தப் பகுதியிலே, அதாவது வடக்குப் பகுதியில் வடக்கு வட்டாட்சியர் அலுவலகமும், தெற்குப் பகுதியில் தெற்கு வட்டாட்சியர் அலுவலகமும் அமைந்தால் சிறப்பாக இருக்கும். என்றென்றைக்கும் கேட்காததையும் கொடுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து, இதுபோன்ற கட்டடத்தையும் உருவாக்கித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாவட்ட நிருவாகத்தில் வருவாய்த் துறையின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனாலே, பணிச்சூழலை மேம்படுத்தும்பொருட்டும், பொது மக்கள் எளிதாக அணுகிட உதவவும், வருவாய்த் துறைக்குத் தேவைப்படும் அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள், முன்னெப்போதும் இல்லாத வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசிலே முன்னுரிமை அடிப்படையிலே உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மதுரை மாவட்டத்திலே, உசிலம்பட்டி புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை 27—2—2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது பொற்கரங்களாலே திறந்து வைத்தார்கள். அதேபோல, திருமங்கலம் புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை 2—6—2015 அன்று மாண்புமிகு

2016 ஆகஸ்ட் 23]

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது பொற்கரங்களாலே திறந்து வைத்தார்கள். அதேபோல, சமயநல்லூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்களை 16—6—2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் தனது பொற்கரங்களாலே திறந்து வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தற்போது, மதுரை கிழக்கு புதிய வட்டாட்சியர் அலுவலகம் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதைப்போல, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே தகவல் மைய கட்டடம் (Information Centre) 28—12—2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது மதுரை மேற்கு புதிய வட்டாட்சியர் அலுவலகம், திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அலுவலகம், மேலும் மதுரை மாவட்டத்திலே 23 கிராம நிருவாக அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கான கட்டடங்கள் கட்ட அரசாணைகள் வெளியிடப்பட்டு, 22 கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் இடப் பிரச்சினை காரணமாக, ஆய்விலே இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் 5 வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்திலே 88 வருவாய் நிருவாக அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் மதுரை மாவட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவோடு, மதுரை மக்களுக்காகவும், வருவாய்த் துறைக்காகவும் கட்டிக் கொடுத்த கட்டடங்கள் ஆகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், வட்டாட்சியர் அலுவலகங்களும் மதுரையின் மையப் பகுதியிலேதான் இருக்கின்றன. வடக்குப் பகுதிக்கும், தெற்குப் பகுதிக்கும் அது மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அந்தக் கட்டடம் நல்ல நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலும்தான், இப்போதைக்கு அதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் சொன்னதைப்போல, வருவாய்த் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையிலே, பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளிலே ரூ.356 கோடியிலே 377 கட்டடங்களை (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறைக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

முற்பகல் 10—45

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிசீலனைக்கு நன்றி. வருவாய்த் துறையில் 377 கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அந்த 377 கட்டடங்களோடு நான் கோரியுள்ள கட்டடங்களையும் கட்டிக் கொடுத்து, அந்த எண்ணிக்கையை 379 ஆக உயர்த்தித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டு, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று— மதுரை மாவட்டத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகிற முன்னுரிமையின் அடிப்படையிலே, இந்தக் கோரிக்கையையும் எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*